தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர் அலுவலகம், நீராய்வு நிறுவனம், நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு, தரமணி, சென்னை -113.

முன்னிலை: பொறி. திரு. கு. தட்சிணாமூர்த்தி, M.E(Structural).,F.I.E., தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர், பொபது.,

செயல்முறை எண்: நிஎ-1/865/ 2021 / நாள்: 04.10.2021

பொருள்: பணியமைப்பு – பொபது – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி திரு.எம்.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர் - அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது 24.08.2018 முற்பகல் பணியில் சேர்ந்தார் - பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1.முதன்மை தலைமைப் பொறியாளர்,நீ.ஆ.து., (ம) தலைமைப் பொறியாளர்(பொது),பொபது., சேப்பாக்கம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: எஸ்3(4)/68248/2018 நாள்: 27.07.2018.

2.இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: அ1/453/2018 நாள்: 23.08.2018

3.செயற்பொறியாளர்,பொ.ப.து., தரக்கட்டுப்பாடு கோட்டம், நீ.ஆ.து., சேப்பாக்கம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: இ-1/439/2018/நாள்: 03.09.2018

4.அரசாணை(நிலை) எண்: 48 தொ.ம.வே.வா(க்யூ) துறை நாள்: 26.02.2021

*****

பார்வை 1,2 மற்றும் 3-ல் காணும் செயல்முறை ஆணைகளின் படி, திரு.எம்.மோகன்ராஜ் அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தரக்கட்டுப்பாடு கோட்டம்,நீ.ஆ.து.,சேப்பாக்கம், சென்னை அலுவலகத்தில் 24.08.2018 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை 4-ல் காணும் அரசாணையின் பத்திகள் (5.1) மற்றும் (5.2)-ல் "02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணயமர்த்தப்பட்டு, எந்த விதித்தளர்வும் இன்றி(Relaxation of Rules) (ம) அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும், நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன் முறைப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திரு.எம்.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியில் சேர்ந்த நாளான 24.08.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் & பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.எம்.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர் | 03.06.1988 | 24.08.2018 முற்பகல் | 24.08.2018 முற்பகல் |

1. தமிழ்நாடு மாநில (ம) சார்நிலைப் பணியாளர் விதித் தொகுப்பு பொது விதி 23(ஏ)(1)-ன் படி மேற்காணும் நபர் திரு.எம்.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர், பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் அப்பதவியில் தகுதிகாண் பருவம் தொடங்கியதாக கருதப்படுகிறது என்றும் இவர் மூன்றாண்டு

கால தொடர் பணியில் ஈராண்டுகால தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்.

2. இவரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

3. தனியருக்கு நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு இரண்டாம் (ம) தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கலாம்

மேலும் இவர் அளித்த ஆவணங்களிலோ உறுதிமொழியிலோ தவறு என தெரியும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஓம் /-
தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர்,பொபது.,
நீராய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு.,நீஆது.,
தரமணி, சென்னை -113.

பெறுநர்:
திரு.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர்
(வழி: செயற்பொறியாளர், தரக்கட்டுப்பாடு கோட்டம்,நீ.ஆ.து., சென்னை)

நகல்: செயற்பொறியாளர், தரக்கட்டுப்பாடு கோட்டம்,நீ.ஆ.து.,சென்னை அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் தனியரின் பணிப்பதிவேட்டில் பதியும் பொருட்டும் அனுப்பப்படுகிறது. மேலும் பெறப்பட்ட சான்றாவணங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இவற்றை பெற்றுக் கொண்டமைக்கு ஏற்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: உபரி

/ஆணைப்படி/

ஆட்சி அலுவலர்,நீ.ஆ.து., 12.11.24
சி.ச.
12/11/24